R 2433 (page 44)

# புதிய சிருஷ்டியின் மன விருப்பங்கள்

## ASPIRATIONS OF A NEW CONVERT.

பரிசுத்தமாகவே இருக்கவிரும்பினேன்,
பார்வைக் கழகாய் தோற்றம் வேண்டினேன்,
இளம் மொட்டுக்கள் மலர்வதைப்போன்றே
பனித்துளிரோடு மலர்ந்திட வேண்டினேன்,
இரட்சகர் கொடுத்த மீட்பின் வெண் வஸ்திரம்
இருக்கையில் எனக்கு ஏன் அழுக்கு வஸ்திரம்?
மலைகளைப்போன்றே உயரமாகவே,
விண்ணை முட்டியே மேகங்கள்மத்தியில்
உறுதியாகவே கம்பீரமாகவே நிற்க விரும்பினேன்,
என் எஜமான் கொடுத்த பலத்தின்மிகுதியால்,
எனக்குள் இருந்த பலவீனம் மறைந்தது,
மாபெரும் தடாகத்தின் நீரினைப்போன்றே அமைதியாகவே எந்தன் வாழ்க்கை(தடாகம்-ஏரி)
அசைவற்றிருக்க வேண்டி விரும்பினேன்,
காற்றடித்தாலும் கடலே உடைந்து கடும் புயல் வீசினாலும்,
அசைக்க முடியாத வாழ்க்கை விரும்பினேன்,
தேவனே எந்தன் ஆசைகள்இ என் இதய விருப்பங்கள் உலக முடிவிலே நிறைவு எய்துமே,
நிலைத்த பார்வையால் வெறித்து நோக்கையில் பரிபூரணம் நிறைவுறும்,
மாட்சிமிகு திட்டத்திற்கே,
ஆஹா., என் தேவனேஇநான் உம்மைப்போலல்லவா மாறி இருந்திருக்க வேண்டும்?.
என் இதயம்தானே உம் வாசம் வீசும் தோட்டமாகவே மாறிட வேண்டும்,
என் ஜெபங்கள் உம் மலைமேலே ஏறிவர வேண்டும்,
அளப்பறியா அமைதியாக என் மகிழ்ச்சி அமைய வேண்டும்,
உமக்கெனவே பரிசுத்த அக்கினியாய் ஜீவபலி உயர வேண்டும்,
அந்த அக்கினியே என்னுடைய பாவங்களை சுத்தம் செய்ய வேண்டும்,
ஏற்கப்பட்ட சுகந்த பலியாக எந்தன்பலி உமது நாசி வரை உயர்ந்து வாசம் வீச வேண்டும்.

**- R. B. HENNINGES.**

---